இசபெல்லா சரித்திரம்

T. S. D. SAMI

1912

80

THE STORY OF

# ISABEL.

இஸாபெல்லா சரித்திரம்.

BY

T. S. D' SAMI.

PUBLISHED BY
T. KRISHNASWAMI AIYAR,
*Hindu Educational Trading Co.,*
KUMBAKONAM.

1912.

0111,2554,m1
N12
59854

[Price Annas Two.

# THE STORY OF
# ISABEL.

## இஸாபெல்லா சரித்திரம்.

BY

**T. S. D' SAMI.**

PUBLISHED BY
T. KRISHNASWAMI AIYAR,
*Hindu Educational Trading Co.,*
**KUMBAKONAM.**

1912.

*All rights registered.*] [**Price Annas Two.**

ALEXANDRA PRESS, KUMBAKONAM.

59854

N12

# பீடிகை.

ஷேக்ஸ்பியர் என்னும் மகாகவி செய்த (*Measure for Measure*) மெஷர் பார் மெஷர் என்னும் சிறந்த நாடகக்கதையை தமிழ் நாட்டாரின் உபயோகத்திற்காக இந்த புத்தகரூபமாக வெளிப்படுத்தியிருக்கிறோம். கல்வி, அறிவு, ஒழுக்கம், கற்பு, தெய்வபக்தி முதலிய உத்தமகுணங்கள் ஒரு ஜாதியாருக்காவது, ஒரு மதத்தினருக்காவது பிரத்யேகமான சொத்து அல்ல என்பது இந்த நூலால் தெளிவாய் விளங்கும். இக்காலத்தில் வசனநடையில் யாவரும் படித்துப்பொருள் அறியும்படியான கிரந்தங்கள் மிகச்சிலவாய் இருத்தலை நினைத்து இது எழுதப்பட்டது. ராஜநீதி, செங்கோன்மை, சகோதரவாஞ்சை, சுயநயம் பாராட்டாமை, பதிவிரதா தருமம் முதலான சாசுவததர்மங்களை விளக்க எழுதப்பட்ட கிரந்தமானதால் யாவரும் இதனை விருப்பத்துடன் ஆதரிப்பார்களென்று நம்பி அச்சிடலானோம். இக்கதை முதலில் "ஸர்வவியாபி" என்னும் புதுவை வாரப்பத்திரிகையில் அச்சிட்டு முடிவுபெற்றது. தமிழ் நாட்டார் இச்சிறு நூலுக்குச்செய்யும் ஆதரவைக்கண்டபின் இன்னும் வேறு சிலவற்றையும் வெளிப்படுத்த உத்தேசித்திருக்கின்றோம்.

இக்கதை அச்சிடுமுன் பிழைகளைத் திருத்திக் கொடுத்த மகா-௱-௱-ஸ்ரீ கே. வேங்கடராம ஐயர் B.A. அவர்களுக்கு வந்தனமளிக்கின்றோம்.

யாவர்க்கும் மங்களமுண்டாகுக.

KUMBAKONAM,
1st MAY 1912.

T. S. D' SAMI.

MADRAS.

# THE STORY OF

# ISABEL

## (THE CHASTE.)

# இஸாபெல்லா

வென்னும்

## கற்புக்கரசியின் சரித்திரம்.

ஐரோப்பா கண்டத்திற்குத் தெற்கே ஆஸ்திரியா ஹங்கரி என்னும் ஓர் நாடுண்டு. அதில் வியென்னா என்று ஓர் சிறந்த நகருண்டு. பூர்வகாலத்தில் இந்நகரை இரக்கமும் சாந்தமும் பொருந்திய குணத்தினனாகிய ஓர் அரசன் அரசுபுரிந்து வந்தான். இவன் தன் பிரஜைகள் சட்டத்திற்கு விரோதமான குற்றங்களைச்செயின் முதலாய் அவர்களைத் தண்டிக்க மனம் வராமல் தயாளத்தோடு மன்னிப்பான். இதனால் அந்நகரில் அக்கிரமங்கள் தண்டிக்கப்படாமல் மிதமிஞ்சிப்போயின. அந்நகரின் சட்டத்தில் பரஸ்திரீகமனம் மரணதண்டனைக்குப் பாத்திரமான ஓர் குற்றமாயிருந்தது. முக்கியமாய் இக்குற்றங்களைச் செய்தவர்கள் தண்டிக்கப்படாமல் ஊரிலெங்கும் விபசாரம் அதிகரித்து, ஐயோ! விவாகமென்பது கடவுளால் மனித சந்தானத்திற்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் தேவ திரவிய அநுமானமென்பதை மறந்து அவ்வூர் பிரஜைகள்

மிருகங்களுக்கும் தங்களுக்கும் யாதோர் வித்தியாசமில்லாமல் கட்டளைக்கு விரோதமான பாவங்களை மனங்கூசாமல் செய்யத்தலைப்பட்டார்கள். இளங்கன்னியர்களின் பெற்றோர்களால் தங்கள் புதல்விகள் சிறுவர்களால் சோரஞ்செய்துகொண்டு போகப்பட்டார்கள் என்னும் பிராது அரசன்முன் பிரதி தினமும் கொண்டுவரப்பட்டன.

அந்த நல்ல அரசன் தன் பிரஜைகளிடம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டுவரும் இத் துர்வழக்கத்தைக் கண்டு வெகுவாய் துக்கப்பட்டு பின்வருமாறு ஆலோசிக்கலாயினன். "நான் என்ன செய்வேன். என் பொறுமையும், சாந்தகுணமுமே என் தேசத்தைப் பாழாக்கின. நான் எப்போதும் கண்டிப்புள்ளவனுயிருந்தால்இந்த துர்க்குணம் அதிகரித்திராது. இப்போது திடீரென நான் மாறுவேனேயானல் எப்போதும் என்னிடத்தில் அபரிமிதமான நேசத்தைக்கண்ட ஜனங்கள் என்னை கொடுங்கோன் மன்னனென எண்ணுவார்கள். ஆகையால் இதற்கோர் உபாயம் செய்யவேண்டும். எனக்குள்ள ஸர்வாதிகாரமும் கொடுத்து ஓர் பிரதிநிதியை எனக்குப்பதிலாக ஏற்படுத்திவிட்டு நான் கொஞ்சநாளைக்காவது என் தேசத்தைவிட்டு விலகியிருப்பேன். ஜனங்களுக்கு என்பேரில் வெறுப்புவராமல் தேசசட்டங்கள் கண்டிப்பாய் நடத்தப்பட்டு என் நாடு சீர்ப்படும்" என இவ்விதமான ஆலோசனை செய்துகொண்டு தனக்குப்பதிலாக தன் நாட்டை ஆள ஆஞ்சேலோ (Angelo) என்னும் ஓர் பிரபுவைத் தெரிந்துகொண்டான். இவர் அந்த வியென்னு நகரில்



நிலை தவருத நடத்தையால் பரிசுத்தவான் என்ற கீர்த்தியும் பெற்றவர். இச்சமாசாரத்தைக்கேட்ட அரசனுடைய ஆத்மார்த்த சிநேகிதனுகிய எஸ்காலுஸ் (Escalus) பிரபுவும் "அப்பேர்ப்பட்ட மகிமைக்கும் இராஜ அனுக்கிரகத்திற்கும் பாத்திரமான மனிதன் ஒருவர் வியென்னு நகரில் உளரெனில் அவர் ஆஞ்செலோ பிரபுவே" என்றுன்.

தனக்குப் பிரதிநிதியாய் இருந்து தன் தேசத்தைச் சர்வாதிகாரத்துடன் ஆள ஆஞ்செலோ பிரபுவை ஏற்படுத்தி அரசன் அன்னியநாட்டிற்குப் போவதாய் பாவனை செய்து தான் இல்லாதகாலத்தில் பரிசுத்தவானுய் காணப்படுகிற தன் பிரதிநிதி எப்படி நடந்துகொள்ளுகிறுன் என்று சோதிக்கும்பொருட்டு ஊரைவிட்டு வெளியே போகாமல் சன்னியாசி வேடம் பூண்டு தன்தேசத்திலேயே ஓர் குருமடத்திற்குச் சென்றுர்.

ஆஞ்செலோ பிரபு இராஜ அதிகாரத்தை வகித்த கொஞ்ச நாளைக்கெல்லாம் கிலாடியோ (Claudio) என்னும் ஓர் வாலிபன் பெற்றோர் அனுசரணையிலிருந்த ஓர் சிறுமியைச் சோரஞ்செய்து கொண்டுபோன குற்றத்திற்காக இதுவரையிலும் உறங்கிக் கிடந்த தேச சட்டத்தின் பிரகாரம் மரணதண்டனை விதிக்கப்பெற்று காராகிரகத்தில் அடைக்கப்பட்டான். அவனுக்காக இராஜனுடைய பிரிய சிநேகிதனுன எஸ்காலுஸ் பிரபுவே எவ்வளவுதான் மன்றுடின போதிலும் பயன்படவில்லை.

"ஐயோ, நான் யாருக்காகப் பரிந்து பேசுகிறேனோ அந்த நிர்ப்பாக்கிய வாலிபனுடைய தகப்பனார் வெகு கண்ணிய புருஷர். அவர் முகத்திற்காக இந்த வாலிபனுடைய குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளுங்கள்" என்று எஸ்காலுஸ் பிரபு மன்றாடினார். ஆனால் ஆஞ்செலோ பிரபு "தேச சட்டங்களை காகங்களைப் பயமுறுத்த அவரைப்பந்தலில் மாட்டியிருக்கும் கரிச்சட்டிகளுக்குச் சமானப்படுத்தமாட்டேன். பழகப்பழக இக்கரிச்சட்டிகள் தங்களுக்கு யாதொரு தீங்கும் செய்கிறதில்லை என்று கண்டு காகங்கள் அவைகளையே தங்களுக்கு ஆசனமாகக்கொண்டு அவற்றின் மேலேயே உட்கார வருவனபோல நமது சட்டங்களும் பிரயோஜனமற்றவைகளாய் போகவிடுவது சரியோ? அவன் சாகவே சாவான்" என்றார்.

காராகிரகத்திற்குப் போகும் வழியில் கிலாடியோ தன் சினேகிதனாகிய லூசியோ (Lucio) வைக் கண்டு "சினேகிதா, நீ எனக்கோர் சிறிய உபகாரஞ் செய்ய வேண்டும். இன்று பரிசுத்த கிளாரம்மாள் (Clare) தவமடத்து கன்னிகாஸ்திரீகளில் ஒருத்தியாக தவவேடம் பூண இருக்கும் என் சகோதரியாகிய இஸாபெல்லாளைக் (Isabel) கண்டு என் நிர்ப்பாக்கிய ஸ்திதியை அவளுக்கு அறிவி. அவளே நேரில் நமது இராஜப் பிரதிநிதியாகிய ஆஞ்செலோ பிரபுவிடம் எனக்காக மன்றாடும்படிச் சொல். அவளுடைய மென்மதுர வாக்கால் அவரை இணங்கச் செய்வாள் என்று நம்புகிறேன். பெண்ணென்றால் பேயுமிரங்குமல்லவோ" என்றான்.



கிலாடியோவுக்கு இஸாபெல்லாள் என்றோர் சகோதரி இருந்தாள். அவள், முட்கள் மத்தியில் ரோஜா புஷ்பிப்பதுபோல விபசாரம் நிறைந்த இவ்வூரில் கற்புக்கரசியாய் இப்பாவவுலகத்தைத் துறந்து என்றும் கன்னியாய் தன்னைப் படைத்த பரமனுக்கே தன் கற்பை அர்ப்பணமாக்கி தவவேடம் பூண உத்தேசித்து அன்று அவ்வூர் பரிசுத்த கிளாரம்மாள் தவமடத்திற்குச் சென்றனள். அம்மடத்தின் ஒழுங்குகளைப்பற்றி ஓர் கன்னிகாஸ்திரீயினிடம் விசாரித்துக் கொண்டிருக்கும் போது கிலாடியோவினால் அனுப்பப்பட்ட அவன் சினேகிதனான லூசியோ "இம்மடத்திற்கு சமாதானமுண்டாகுக" என்று மங்களம் கூறி மடத்து வாயிலில் வந்து நின்றனன். இச்சத்தத்தைக் கேட்ட இஸாபேல் யார் என்று திடுக்கிட, கன்னிகா ஸ்திரீ: "அது ஒரு புருஷனுடைய குரலாயிருக்கிறது. சாந்தகுணம் பொருந்திய இஸாபெல் அவர் வந்த காரணம் என்னவென்று நீ போய் விசாரி. நீ பேசலாம், நான் அவரிடம் பேசக்கூடாது. இந்த மடத்தின் தவ உடை தரித்த பிறகு நீயும் மடத்துத் தாயார் முன்னிலையிலல்லாமல் புருஷருடன் பேசப்படாது. பேசவேண்டிய சம்பவம் நேரிட்டால் உன் முகத்தைக் காட்டக்கூடாது. உன் முகத்தைக் காட்டினால் பேசப்படாது."

இஸாபெல்லாள்.—இன்னும் ஏதாவது சுதந்தரங்கள் உண்டோ?

கன்னிகாஸ்திரீ.—இது போதாதோ.

இஸாபெல்லாள்.—இன்னும்வேண்டுமென்று சொல்லவில்லை. பரிசுத்த கிளாரம்மாள் சபையைச் சார்ந்தவர்களுக்கு இன்னும் கஷ்டமான ஒழுங்குகளிருந்தாலும் எனக்குச் சம்மதந்தான் என்றாள்.

மறுபடியும் லூசியோவின் குரல் கேட்கப்பட கன்னிகாஸ்திரீ: "அவர் மறுபடியும் கூப்பிடுகிறார். நீ போய் அவருக்கு என்ன வேண்டுமென்று விசாரி" என்றாள்.

உடனே இஸாபெல்லாள் லூசியோவிடம் போனாள்.

லூசியோ இஸாபெல்லாளுக்கு மரியாதை செய்தான்.

இஸாபெல்லாள்.—உமக்கு சமாதான முண்டாகுக. தாங்கள் வந்த காரியமென்ன?

லூசியோ.—கன்னிகையே! உமக்கு மங்களமுண்டாகுக. தங்களுடைய கன்னங்களில் புஷ்பித்திருக்கும் ரோஜா மலர்களைக்கொண்டு தாங்கள் கன்னிகையென்றே நம்புகிறேன். இந்த மடத்தில் இன்று புதிதாய் வந்திருக்கும் நிர்ப்பாக்கிய கிலாடியோவின் சகோதரியாகிய இஸாபெல்லாளிடம் பேசும் பாக்கியத்தைத் தரவேண்டும்.

இஸாபெல்லாள்.—என் நிர்ப்பாக்கிய கிலாடியோ என்றாய்? அவனுடைய சகோதரியாகிய இஸாபெல்லாள் நான் தான்.

லூசியோ.—சாந்தமும் அழகும் வாய்ந்த அம்மணீ உன் சகோதரன் என் மூலியமாய் உனக்கு வந்தனமளிக்கின்றான். அவனிப்போது காராகிரகத்திலிருக்கின்றான்



இஸாபெல்லாள்.—ஐயோ! எதற்காக?

லூசியோ.—ஓர் கன்னிகையை சோரஞ் செய்ததற்காக.

இஸாபெல்லாள்.—ஆ! என் தங்கை ஜூலியேத் (Juliet) என்பவளாய் இருக்குமோ?

லூசியோ.—என்ன அவள் உன் தங்கையோ?

இஸாபெல்லாள்.—இல்லை; நாங்களிருவரும் பள்ளிக்கூடத்துத் தோழர்கள். கன்னிகாமட பள்ளிக்கூடங்களில் நேசத்தாலும் மடத்தின் ஒழுங்கின்படியும் ஒருவருக்கொருவர் இவ்வித உறவு கூறி அழைப்பதுண்டு.

லூசியோ.—ஆம், அவள்தான்.

இஸாபெல்லாள்.—இவள் சிறுபருவம் துவக்கி என் சகோதரனை நேசித்தாள் என்பது எனக்குத் தெரியும். என் சகோதரன் அவளைக் கலியாணம் பண்ணிக்கொள்ளட்டுமே.

லூசியோ.—அவன் ஆசிக்கிறதும் அதுதான். ஆனால் இப்போது நமது நாட்டரசன் ஊரைவிட்டு எங்கேயோ போய்விட்டார். அவருக்குப் பதிலாய் அவருடைய சர்வாதிகாரமும் பெற்ற ஆஞ்செலோ பிரபு எங்கேயோ உறங்கிக் கிடந்த தேச சட்டத்தைக் காட்டி அதன்படி கிலாடியோவுக்கு மரண தெண்டனை விதித்தான். உன் சகோதரனையே மற்ற ஜனங்களுக்கு ஓர் மாதிரியாக்கத் தெரிந்துகொண்டான். அவனை விடுவிக்கக்

செய்த ஏற்பாடுகளெல்லாம் வியர்த்தமாயின. ஆஞ்செலோ பிரபுவோ சற்றும் மனம் இணங்கவில்லை. ஒருக்கால் உன் நயவேண்டுகோளால் அவரைச் சாந்தப்படுத்தக் கூடுமேயல்லாது எங்களுக்கு வேறே நம்பிக்கை கிடையாது. உன் சகோதரன் உன்னிடம் என்னை அனுப்பிய காரணமும் அதுவே.

இஸாபெல்லாள்.—ஐயோ! என் சகோதரனுக்கு நன்மை செய்யக்கூடிய வல்லமை என்னிடத்தில் என்ன இருக்கிறது?

லூசியோ.—அப்படி சந்தேகிப்பதுதான் கூடாது. சந்தேகங்களே நம்முடைய சத்துருக்கள். அனேகம் தடவைகளில் நாம் அடையக்கூடிய நற்பலன்களை அடைய முயற்சி செய்யப் பயந்து அவைகளை அடையாமற்போகிறோம். ஆஞ்செலோ பிரபுவிடம் போய் மங்கையர் மனு மறுக்கப்படுவனவல்லவென்று அவனுக்குக் காட்டு. பாவையர் துன்பம் பொறுக்கக்கூடியதோ என்றான்.

இதைக்கேட்ட இஸாபெல்லாள் என்னால் கூடியவற்றைச் செய்கிறேனென்று சொல்லிப் புறப்பட்டு மடத்துத் தாயாரிடம் விடைபெற்றுக்கொண்டு ஆஞ்செலோவின் அரண்மனைக்குப்போய் அவர் பாதத்தில் தீர்க்கதண்டனிட்டு "ஐயோ! நானொரு பேதை, என் விண்ணப்பத்திற்குச் செவிகொடுத்தருளும்" என்று வணங்கி நின்றாள். அதற்கு ஆஞ்செலோ பிரபு அவளை நோக்கி "உன் மனு யாது" என்றார்.



இஸாபெல்லாள்.—பிரபு! நானதிகமாய் அருவருக்கிற துர்க்குணம் ஒன்றுண்டு. அது நியாய தண்டனை அடையவேண்டுமென்பதுதான் எனது விருப்பம். நான் வழக்காடக்கூடாது. ஐயோ என் மனது போராடுகிறது.

ஆஞ்செலோ.—என்ன விசேஷம்?

இஸாபெல்லாள்.—ஆண்டவனே, என் சகோதரன் மரணதண்டனை யிடப்பட்டிருக்கிறான். அவன் செய்த குற்றம் குற்றமே. என் சகோதரனுக்காக மன்றாடுகிறேன்.

ஆஞ்செலோ.—என்ன! குற்றத்தை வெறுத்து குற்றம் செய்தவனை சும்மா விடுகிறாய். ஒவ்வொரு குற்றத்துக்கும் அதைச்செய்வதற்கு முன்னமேயே தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. குற்றம் செய்கிறவர்களை நான் தண்டியாமல் விடவேண்டுமானால் இவ்வூர் அரசாட்சியில் நான் செய்யவேண்டிய வேலை வேறில்லை.

இஸாபெல்லாள்.—"ஐயோ! நியாயமும் கடூரமுமான சட்டமே! என் சகோதரன் இறந்தான். கடவுள் உம்மை ஆசீர்வதிப்பாராக" என்று சொல்லி வெளியே போகப் புறப்பட்டாள். கற்பானது எவ்வளவு விலையேறப்பெற்ற மாணிக்கமென்று அறிந்த இஸாபெல்லாளுக்கு அதைத் திருடிய சோரன் தன் சகோதரனாயிருந்தாலும் அவனுக்காக பரிந்து பேசுவது தகாது. அவன் கடும் தண்டனைக்குள்ளாவது நியாயந்தான் என்று அப்போது தோன்றினபடியால் சற்று பின் வாங்கினாள். ஆனாலும் சகோதர

வாஞ்சை மேற்கொள, மேலும் அவ்விடத்தில் என்ன நடக்கிறதென்று அவள் பின்னால் மறைந்து வந்து இவர்களுக்குள் நடக்கும் சம்பாஷணையை ஒற்றுக் கேட்டுக் கொண்டிருந்த லூசியோ "அப்படி எளிதில் விட்டு விடாதே; அவர் காலில் விழு. அவர் அங்கியைப் பிடித்துக்கொள். என்ன மந்தமாயிருக்கிறாய். நீ அவரிடத்தில் கேட்பது ஒரு குண்டூசியென்று நினையாதே." என்று இரகசியமாய் தான் ஒளித்திருந்தவிடத்திலிருந்து உற்சாகப்படுத்த மறுபடியும் இஸாபெல்லாள் பிரபுவின் முன்பாக முழந்தாளிட்டு "என் சகோதரன் சாகத்தான் வேண்டுமோ"? என்றாள்.

ஆஞ்செலோ.—பெண்ணே, வேறு வழியில்லை.

இஸாபெல்லாள். இல்லை தாங்கள் மனது வைத்தால் அவனை மன்னிக்கலாம். தாங்கள் காட்டிய இரக்கத்திற்காக பரலோகத்திலும் சரி பூலோகத்திலும் சரி யாரும் விசனப்படப்போகிறவர்கள் இல்லை.

ஆஞ்செலோ.—நான் செய்யமாட்டேன்.

இஸாபெல்லாள்.—ஆனால் தங்களுக்கு இஷ்டமிருந்தால் தாங்கள் செய்யக்கூடுமோ?

ஆஞ்செலோ.—எனக்கிஷ்டமில்லாததை நான் செய்யமுடியாது.

இஸாபெல்லாள்.—என்னைப் பீடித்திருக்கும் சகோதர வாஞ்சை தங்களையும் பீடிக்குமானால் இவ்வுலகத்திற்கு யாதொரு தீங்கும் வாாமல் அவன் குற்றத்தை பொறுக்கக்கூடுமா ?



ஆஞ்செலோ.—அவன் விஷயம் ஓர் தரம் தீர்மானிக்கப்பட்டது, இனிப் பிரயோஜனமில்லை.

இஸாபெல்லாள்.– பிரயோஜன மில்லையா? என் இல்லை? ஓர் தகாத வார்த்தை சொல்லிவிட்ட நான் அதை என் மறுத்துரைக்கக்கூடாது. முடிதரித்த மன்னனானாலும்சரி, பட்டயம் ஏந்திய அவன்பிரதிநிதியானாலும் சரி, கேடயமணிந்த போர்வீரனானாலும் சரி, அங்கிதரித்த நியாயாதிபதியானாலும் சரி, அவர்கள் பூண்ட இரக்கம் தயை என்பதைத் தவிர வேறோர் கவசம் அவர்களை அதிகமாய் சிறப்பிக்கிறதில்லை என்பதை நம்பும். என் சகோதான் உம்மைப்போலிருந்து நீர் அவனைப்போலிருந்தால் நீரும் அவனைப்போல் தவறியிருப்பீர். அவன் உம்மைப் போல் அவ்வளவு கண்டிப்பா யிருந்திருக்கமாட்டான்.

ஆஞ்செலோ.—நல்லாய்! தயவு செய்து அப்புறம் போ.

இஸாபெல்லாள்.—ஆண்டவனே உம்முடைய அதிகாரத்தில் நானிருந்து, நீர் இஸாபெல்லாளா யிருந்தால் இப்படி நடக்குமா? ஒருபோதுமில்லை. நியாயாதிபதியாயிருப்பது இன்னது, குற்றவாளியா யிருப்பது இன்னது என்று தங்களுக்கு தெரிவிக்க ஆசிக்கிறேன்.

ஆஞ்செலோ.—உன் சகோதரன் சட்டத்தின்படி தண்டிக்கப்பட்டவன், நீ வார்த்தையாடுவதில் பிரயோஜனமில்லை.

இஸாபெல்லாள்.—ஐயோ! ஐயோ! இவ்வுலகிலுள்ள சகல ஆன்மாக்களும் மரண தண்டனையிடப்பட்டவர்கள்தாம். வெகு எளிதில் மேற்கூறிய தண்டனையை நிறைவேற்றக் கூடியவரே அம்மரணத்திலிருந்து தப்புவிக்கும் மருந்தையும் கண்டுபிடித்தார். உன்னத நீதியானவர் தன் நியாயத்துக்கொத்த பிரகாரம் உம்மைத் தீர்மானித்திருப்பாரேயானால் நீர் இப்போது எங்கிருப்பீர்? அதைச் சற்றே யோசியும். அப்போது தயை உம்முடைய நாவிலிறங்கி உம்மைப் புதிய மனிதனாக்கும்.

ஆஞ்செலோ.—பொற்பாவாய், உன் சகோதரனைத் தண்டித்தது நானல்ல, தேச சட்டமென்றே எண்ணு. அவன் என் உறவின் முறையானாலும் சரி, என் சகோதரனானாலும் சரி, என் மகனானாலும் சரி, அவனுக்கும் அத்தண்டனையே விதித்திருப்பேன். நாளைக்கு அவன் சாகவேண்டியதுதான்.

இஸாபெல்லாள்.—நாளைக்கா? அவ்வளவு சடிதியிலா? அவனை மன்னியும், மன்னியும். அவன் மரணத்திற்கு இப்போது ஆயத்தமாயில்லையே. நம்முடைய சமயலுக்குக்கூட கொழுத்து தயாராயிருக்கும் கோழிகளை அடிக்கிறோமே. நம்மைப்படைத்த பரமனுக்கு அர்ச்சனை பண்ணுவதில் அவ்வளவுகூட கவனியாமல் போவோமா. ஆண்டவனே சற்று யோசியும். அவன் செய்த குற்றத்திற்காக இது வரையிலும் கொல்லப்பட்டவர்கள் யார்? எத்தனையோ பேர் இத்தகைய குற்றத்தைச் செய்திருக்கிறார்கள்.



ஆஞ்செலோ.—தேச சட்டம் இதுவரையிலும் உறங்கிக்கிடந்தாலும் காலஞ்சென்று போகவில்லை. இதுவரையிலும் தேச சட்டத்தை நிராகரித்து அதை அமுலுக்குக் கொண்டுவராமல் விட்டார்களேயானால் அந்தக் குற்றத்திற்கு அவர்கள் பாத்தியப்படட்டும். தேசசட்டத்திற்கு என்றால் மறுபடியும் உயிர் கொடுக்கப்பட்டது என்று நினை.

இஸாபெல்லாள்.—ஐயோ கொஞ்சம் இரக்கம் காட்டியருளும்.

ஆஞ்செலோ.—ஆம் இதுவரையிலும் தேச சட்டத்தை அனுசரியாமல் விபசாரத்தை இத்தேசத்தில் வளரவிட்டவர்கள் பேரில் காட்டுகிறேன். இத்தகைய குற்றம் ஒருதரம் தண்டிக்கப்பட்டவுடன் மறுபடியும் அவ்வகை குற்றத்திற்கு தண்டனை விதிக்கவேண்டி வராது. மாதே, என்மேல் குறைசொல்லாதே. உன் சகோதரன் நாளைக்குச் சாவான்.

இஸாபெல்லாள்.—அப்படியானால் இச் சட்டத்தை முதலில் அமுலுக்குக் கொண்டுவருவது நீரும், அக்குற்றத்திற்காக முதலில் மரணமடைவது என் சகோதரனாய்த்தான் இருக்கவேண்டுமோ? ஐயோ இராட்சஸ பலத்தைக் கொண்டிருப்பது மேன்மைதான். ஆனால் அதை இராட்சஸனைப்போல் உபயோகப்படுத்துவது கொடுங்கோன்மையன்றோ? இடிமுழக்கத்தை உண்டுபண்ணும் தெய்வ வல்லமை மனிதர்களுக்குண்டானால் அற்ப காரியங்களுக்கு

முதலாய் ஒவ்வொரு அற்ப உத்தியோகஸ்தனும் இடியையே முழக்குவான். தயாளமுள்ள தேவனே, நீர் இடியை முழக்கி முழு அரச மரத்தின்மேல் வீழ்த்துவதுமல்லாமல், அற்ப நாணலின்மேல் பிரயோகிப்பதுண்டோ? அற்ப மனிதனோ தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கொஞ்ச அதிகாரத்தைக்கொண்டு கோபங்கொண்ட வானரங்களைப்போல் வான லோகத்திலுள்ள தேவதூதர்களும் கண்ணீர் சிந்தும்படியான காரியத்தைச்செய்கிறான்.

(மறைந்திருந்த) லூசியோ.—சரி சரி, அவர் பக்கமாய் திரும்பு. அவர் மனம் இளகுகிறது.

ஆஞ்செலோ.—இவையெல்லாம் என்னிடத்தில் என் சொல்லுகிறாய்?

இஸாபெல்லாள்.—ஏனென்றால் அதிகாரத்தை நம்முடைய பிணியைத் தீர்க்கும் ஔஷதம்போல உபயோகப்படுத்தவேண்டும். ஆண்டவனே, என் சகோதரன் குற்றம் எப்படிப்பட்டதென்று உம்முடைய இருதயத்தைத் தட்டிக் கேளும். அது சுபாவத்துக் குரியதென்று தெரிவிக்கும்பட்சத்தில் உம்முடைய நாவானது என் சகோதரன் உயிரைத் தேடாதிருக்கட்டும் என்றாள்.

இஸாபெல்லாளின் வார்த்தைகளும் அவளுடைய பேரழகும் தண்டிக்கப்பட்ட கிலாடியோவின் குற்றத்தைப்போன்ற துர் ஆசைகளை ஆஞ்செலோவின் மனதில் எழுப்பிவிட்டன. இச்சோதனைகளுக்கு இடங்கொடாமல் உடனே அவளை விட்டு விலக எண்ணி தனக்குள்ளே



அவள் சொல்வது சரியே. என் மனதிலும் அத்தகைய நேசம் உண்டாகிறது. நான் போய் வருகிறேன் என்று சொல்லி அவளுடன் சம்பாஷணை செய்வதை விட்டு போகத்திரும்பினான்.

இஸாபெல்லாள்.—என் சாந்தகுணப் பிரபு, போகாதேயும்.

ஆஞ்செலோ.—நான் யோசித்துச் சொல்லுகிறேன், நாளைக்கு வா என்று சொல்லி மறுபடியும் திரும்பினான்.

இஸாபெல்லாள்.—நான் உமக்கு என்ன லஞ்சம் கொடுப்பேன் என்று பாரும்.

ஆஞ்செலோ.—அவள் தனக்கு லஞ்சம் கொடுக்க யோசித்ததைப்பற்றி கோபங்கொண்டு "என்ன லஞ்சம்" என்று கோபத்தோடு திரும்பினான்.—ஆம் பரலோகமும் நீரும் சேர்ந்து பங்கிட்டுக்கொள்ளக்கூடிய லஞ்சம் பணமல்ல, காசல்ல. அவரவர்கள் தங்கள் மனதுக் கேற்றபடி உயர்ந்தது தாழ்ந்தது என்று மதிக்கக்கூடிய சிறு பற்கைகற்கள் அல்ல. பொழுது விடியாமுன் மாசற்ற விருதயங்களிலிருந்தும்,உலகவாசையைத்துறந்து நித்திய விரதம்பூண்ட கன்னிகைகளிட மிருந்தும் பரலோகத்திற்கு எழும்பும் ஜபதப பிரார்த்தனைகள் தான் என்றாள். நல்லது நாளைக்குவா என்று சொல்லி ஆஞ்செலோ பிரபு உள்ளே போய்விட்டார். இஸாபெல்லாளும் தேவன் உம்மை காப்பாற்றுவாராக என்றாள். அப்படியே ஆகக்கடவது என்று ஆஞ்செலோ பிரபுவும் மனதுக்குள்

உச்சரித்துக்கொண்டார். இஸாபெல்லாள் போனவுடன் "என்ன! என்ன யோசனை கொண்டோம்! அவளோ நானோ குற்றவாளி? அவள் சோதித்தாள் சீ, சீ. ஆஞ்செலோ நீ சோதனைக்குள்ளானாய். இதில் யாருடைய பாவம் பெரியது? அவளல்ல. அவள் நம்மை சோதிக்கவில்லை. நான் தான் சோதனைக்குள்ளானேன். அவள் பேரிலுள்ள நேசமா, அவள் கண்களின் அழகை இன்னொருமுறை நோக்கவோ அவளை மறுபடியும் வரச் சொன்னேன். என்ன கனவோ? மனித சத்துராதியாகிய பசாசு பரிசுத்தவானைப் பிடிக்க பரிசுத்த இத் தூண்டியைப் போடுகிறது. அவளுடைய புண்ணிய நெறியைக் காண்பித்து அவளுடன் பாவம் கட்டிக்கொள்ளத் தூண்டும் சோதனையே மகா கொடியது. மானமிழந்த பெண்களால் எவ்வளவும் அசைக்கக்கூடாத நம்முடைய நற்குணம் இப்புண்ணியவதியால் முற்றும் இளகினதே, இதுவரையிலும் நாரியர் மையலில் சிக்கினவர்களைக் கண்டு நகைத்தோமே" என்று இவ்விதமாக விசனப்பட்டு அன்று இரா முழுமையும் அவன் பட்டபாடுகள் காராக்கிரகத்தில் அடைபட்டிருந்த கிலாடியோ கூட படவில்லை.

அன்றிரவு சிறையில் அடைபட்டிருந்த கிலாடியோவினிடம் சன்னாசிவேடம் பூண்ட அரசன் போய் பல நீதி மொழிகளால் சர்வேசுரனுடைய வழிகளைக்காட்டி தன் பாவத்துக்கு பச்சாத்தாபப்படவும் அவருடன் சமாதானமடையவும் ஏற்பாடுகளைப் பண்ணிக்கொண் டிருந்



தார். "ஆண்டவருடைய தண்டனையை, என் மகனே, நீ தள்ளாதே அவரால் கண்டிக்கப்படுகையாலும் சோர்ந்துபோகாதே. ஏனெனில் ஆண்டவர் தாம் நேசிக்கிறவனை கண்டிக்கிறார்" என்று சொல்லி அவனை சாவுக்கு ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தார். ஆனால் ஆஞ்செலோ பிரபுவோ மாசற்ற புனிதவதியான இஸாபெல்லாளின் கற்புக்கு விரோதமாய் தான்கொண்ட கெட்ட எண்ணத்தினால் இன்னம் கட்டுப்படாமல் மனத்தில் நினைத்த பாவத்தின் அகோரத்தை நினைந்து அதற்காக துக்கப்படுவதும் மறுபடியும் சோதிக்கப் படுவதுமாயிருந்தான். கடைசியாய் அவனுடைய கெட்டகுணம் மேற்கொள நேற்று லஞ்சம் என்று சொன்னமாத்திரத்தில் கோபாவேசத்தால் பொங்கிய ஆஞ்செலோ நம் தூய நல்லாளை அவள் சகோதரனுடைய உயிர் லஞ்சத்தால் சோதிக்க எண்ணினான். மறுநாள் காலையில் ஆஞ்செலோவிடம் இஸாபெல் வந்தபோது அவளைத் தனிமையாய் தன்னறைக்குள் கொண்டுவரச்சொல்லி அவள் கன்னிமையை தனக்குக் காணிக்கையாக வைத்து அவள் சகோதரனாகிய கிலாடியோவினிடம் ஜூலியத் செய்த பாவத்தைக்கட்டிக்கொண்டால் அவள் சகோதரனுக்கு உயிர்ப்பிச்சை கொடுப்பதாகசொல்லி "இஸாபேல் உன்மேல் காதல்கொண்டேன்!" என்றான்.

இஸாபெல்லாள்.—என் சகோதரன் ஜூலியெத்தின்பேரில் கொண்ட காதலுக்காக அவனுக்கு மரணதண்டனை விதித்தீர்.

ஆஞ்செலோ.—ஜூலியத் தன் தகப்பன் வீட்டை விட்டு இரவில் இரகசியமாய் உன் சகோதரனிடம் ஓடி வந்ததுபோல் இன்றிரவு நீ வருவாயேயானால் உன் சகோதரன் சாகான் என்றான். இவ்வார்த்தைகளைக் கேட்ட காரிகை நாகம்போல் சீறி, "அடா, மானிடப்பதரே, நானே மரண தண்டனை அடைய தீர்ப்புப் பெற்றிருந்தாலும் இந்த அவமானத்திற்குள்ளாவதைவிட என் சாவுக்கு முன்னடந்துபோய் என் சிரசை வெட்டும்போது என்னிடமிருந்து பீறிடும் இரத்தத் துளிகள் அனைத்தும் அவ்வளவு கெம்புமணிகளாகக்கொண்டு இவைகளால் இழைத்த இரத்தினத்தாவடம்பூண்டு பஞ்சணைமீதில் சயனிப்பதுபோல் உயிர் விடுவேன். உம்முடைய கண்ணியத்தை இப்படி துர்ப்பிரயோகம் பண்ணுவீரென்று நான் நினைக்கவில்லை. உடனே என் சகோதரனுடைய மன்னிப்பை எழுதித்தாரும், இல்லாவிட்டால் நீர் இன்னாரென்று உலகப்பிரசித்தி பண்ணுவேன்" என்றாள். அதற்கு ஆஞ்செலோ "உன்னை யார் நம்புவார்கள்? கறைபடாத என் நாமமும் நிகரற்ற என் ஜீவியமும் என் வார்த்தைகளும் மேற்கொள்ளுமேயல்லாது உன் குற்றச் சொல் மேவாது. என்னிஷ்டத்திற் கிணங்கி உன் சகோதரன் உயிரைக்காப்பாற்று. இல்லாவிட்டால் உன் சகோதரன் நாளைக்கே சாவான். நாளை வந்து எனக்குப் பதிலுரை" என்று அனுப்பிவிட்டான்.

"நான் யாரிடத்தில் முறையிடுவேன்? இதை யாரிடம் சொல்லிக்கொள்ளுகிறது? என்னை யார் நம்புவார்



கள்" என்று சொல்லிக்கொண்டே காராக்கிரகம் போய்ச் சேர்ந்தாள். அவ்விடத்தில் சன்னாசி உடை தரித்த அரசன் கிலாடியோவிற்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தார்.

"இவ்விடத்திற்கு சமாதானமும் தேவ இஷ்டப் பிரசாதமும் உண்டாகக்கடவதென்று" கூறிக்கொண்டே கிலாடியோ அடைபட்டிருந்த காவற்கூடத்திற்குள் இஸாபெல்லாள் நுழைந்தாள். மாறுவேடம் பூண்டு கிலாடியோவுக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டிருந்த அரசன் "உன்வரவு நல்வரவு ஆகுக" என்றார். கிலாடியோவைக்கண்டு இரண்டொரு வார்த்தை சொல்ல வந்தேன்" என்றாள்.

உடனே அரசன் வெளியே வந்து இவ்விருவருக்குள் நடக்கும் சம்பாஷணைகளை மறைவிலிருந்து தெளிவாய் ஒற்றுக்கேட்கும்படியான ஓர் இடத்தில் தன்னைக் கொண்டுபோய் விடும்படி சிறை காப்பாளனை கேட்டுக்கொண்டார்.

கிலாடியோ.—தங்காய், என்ன தேறுதல் கொண்டுவந்தாய்?

இஸாபெல்லாள்.—இவ்வுலகில் என்ன தேறுதல் இருக்கிறது. வானுலகில் ஆஞ்செலோ பிரபுவுக்கு ஓர் காரியம் ஆகவேண்டியிருப்பதால் அதற்குத் தன் பிரதிநிதியாக உன்னைக் கூடிய சீக்கிரத்தில் அவ்விடத்திற்கனுப்ப உத்தேசித்திருக்கிறார். அதற்கு நீ நித்திய சுதந்

தாவானாய் ஆவாய். அந்த அலுவலைக் கைக்கொள்ள துரிதமாய் நாளைக்கே புறப்படவேண்டும்.

கிலாடியோ.—என்ன அதற்கு யாதொரு பரிகாரமும் கிடையாதோ?

இஸாபெல்லாள்.- ஓர் உயிரை மீட்க ஓர் இருதயம் இரண்டாய் பிளவுபடவேண்டியதுதான். அதைத் தவிர வேறென்ன பரிகாரமிருக்கிறது?

கிலாடியோ.—ஆனால் நான் உயிர்பிழைக்க ஓர்வழியும் உண்டோ?

இஸாபெல்லாள்.—ஆம், உண்டு. நீயும் உயிர் பிழைத்திருக்கலாம். நீதி அதிபனிடத்தில் பேய்க்குரிய இரக்கம் உண்டு. அதை நீ மன்றாடுவாயானால் நித்திய விலங்குக்குள்ளாய் உயிர்வாழ்வாய்.

கிலாடியோ.—நித்திய விலங்கென்றால் என்ன?

இஸாபெல்லாள்.—நீ முளைத்த அடிமரத்திலிருந்து உன் சம்மதத்தின்மேல் உண்டாகக்கூடிய வெட்கக்கேட்டுக்குரிய அவமானம் உன்னைப்பற்றும்.

கிலாடியோ.—ஐயோ, நீ சொல்வது ஒன்றும்விளங்கவில்லையே.

இஸாபெல்லாள்.—கிலாடியோ இன்னும் ஐந்தாறு வருஷம் ஜீவிக்கவேணுமென்கிற ஆசையினால் மரணத்தைவிட நித்திய அவமானத்தை எங்கே தெரிந்துகொள்ளப்போகிறையோ என்று பயப்படுகிறேன். சாக தைரியமாயிருக்கிறாயா?



சாவு என்றால் பயம்தான். ஓர் இராட்சதன் சாகும்போது எவ்வளவு மரணாவஸ்தைப்படுகிறானோ அவ்வளவே நாம் காலால் நசுக்கி எறியும் புழுவும் அனுபவிக்கிறது.

கிலாடியோ.—என் என்னை இப்படி அவமானப்படுத்துகிறாய்? அப்படி எண்ணாதே. நான் சாகவேண்டுமானால் நித்திய யமயாதனையை என் ஆசை நாயகியைப் போல் ஆலிங்கனம் செய்வேன்.

இஸாபெல்லாள்.—இப்பொழுதுதான் நீ என் சகோதரன். இதோ என் தகப்பனார் தன் சமாதியிலிருந்து எழுந்து பேசுகிறார். ஆம் நீ சாகத்தான் வேண்டும். நீ ஈனவேலைகளைச் செய்ய உயிர்பிழைத்திருக்க விரும்பும் அயோக்கியனல்லவென எனக்குத் தெரியும். பரிசுத்தவானைப்போல் காணப்படும் இராஜப்பிரதிநிதி ஓர் பிசாசு. அவனுள்ளிருக்கும் கசுமலம் வெளிப்படுமேயானால் நரகம்போய் பார்க்கவேண்டியதில்லை.

கிலாடியோ.—பரிசுத்த ஆஞ்செலோவா?

இஸாபெல்லாள்.—அவன் காட்டும் பரிசுத்தம் சபிக்கப்படத்தக்க அவன் உடலை மூட பசாசினால் தைத்துக்கொடுக்கப்பட்ட ஓர் போர்வை. நீ உயிர் பிழைக்க வேண்டுமானால் சகோதரா, என் கன்னிமையை அவனுக்குத் தத்தம் பண்ணவேண்டுமாம்.

கிலாடியோ.—ஆ கடவுளே! இதென்ன மோசம். அப்படி ஒருபோதும் வேண்டாம்.

இஸாபெல்லாள்.—இன்றிரவு சொல்லவும்வாய்கூசு கிற காரியத்திற்கு உடம்படாவிட்டால் நீ நாளைக்குச் சாகவேண்டுமாம்.

கிலாடியோ.—வேண்டாம், வேண்டாம், ஒருபோதும் வேண்டாம்.

இஸாபெல்லாள்.—என் உயிரையும் உன்னை மீட்க ஒரு குண்டூசியைப்போல் வீசி எறிவேன்

கிலாடியோ.—என் அருஞ்சகோதரி உனக்கு வந்தனம்.

இஸாபெல்லாள்.—கிலாடியோ நாளைத்தினம் நீ பிராணனைவிட தயாராயிரு என்று சொல்லி அவனுக்கு இன்னும் தேறுதலான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருந்தாள். முதலில் தன் சகோதரியின் அவமானத்தைவிட சாவானது மேல் என்று நினைத்து அதற்குச் சம்மதியாத கிலாடியோவிற்கு சாவின் பயங்கரம் மேலிடவே மெதுவாய் 'இஸாபேல், சாவுஎன்றால் பயமாயிருக்கிறது' என்றான். "கிலாடியோ, அவமானமுடைத்தான ஜீவியம் அரோசிகமான"தென்றாள்.

கிலாடியோ.—ஆனால் செத்து எங்கே போவேன்? உஷ்ணமும் உணர்ச்சியுமுள்ள இத்தேகம் குளிர்ந்து கட்டையாய் அழுகி மண்ணாக வேண்டும். விடுவிக்கப்பட என் ஆத்துமா நெருப்பு நிறைந்த ஓடையில் குளித்து முழுகுமோ? அல்லது பனிக்கட்டியால் வரம்பு கட்டப்பெற்ற ஆனந்த ஸ்தலத்தில் வசிக்கப் புகுமோ? கண்ணிற்குத் தென்படாமல் காற்றில் அலைந்து திரியுமோ? அமைதியற்று மூலைக்கு மூலை ஊளையிட்டுத்திரியுமோ? ஐயோ சாவு பயங்கரமாய் இருக்கிறதே! பிணி, மூப்பு, தரித்திரம், அவமானம், சிறை இவைகள் ஓர் தெய்வலோகம் போல் காணப்படுகிறதே என்று அங்கலாய்க்கத் தொடங்கவே இஸாபெல்லாள் தன் சகோதரனுடைய நல்லெண்ணங்கள் எங்கே மாறிப்போகிறதோ என்று பயந்தாள்.



கிலாடியோ.—என்சகோதரி, எனக்கு உயிர்ப்பிச்சை கொடு. உன்சகோதரன் உயிரைக்காப்பாற்றும் பொருட்டு நீ கட்டிக்கொள்ளும் பாவம், நீ கொண்ட நல்லெண்ணத்தை முன்னிட்டு புண்ணியமாகுமென்றான்.

இதைக்கேட்ட கற்பினவதாரம் போன்றபெண் கோபங்கொண்டு ஓ மிருகமே, நீசா, அயோக்கியத்துரோகி. என் பாவத்தால் நீ மனிதனாக உத்தேசித்தாயோ? சகோதரியினவமானத்திலிருந்து உயிர்வாழ்வது சகோதரபோகமாகாதோ? உன்னை என்னவென்று நினைப்பேன்? என் தாயின்மேல் அவதூறு நினைக்கவோ? இவ்வித அயோக்கியன் என் தகப்பனார் உதரத்தில் எவ்விதம் உற்பத்தியானனோ? உடனேசெத்து நாசமாய் போ. நீ உயிரிழக்க ஆயிரம் பிரார்த்தனைகள் செய்வேனே தவிர உன்னைக் காப்பாற்ற இனி ஒருவார்த்தையும் பேசமாட்டேன்.

கிலாடியோ.—இல்லை, இஸாபேல் நான் சொல்வதைக் கேள்.

இஸாபெல்லாள்.—சீச்சீ! உன்பாவம் தற்செயலாய் ஏற்பட்டதல்ல, அதிலேயே நீ வியாபாரம் செய்கிறாய். உனக்குக்காட்டும் இரக்கம் விபசாரமாகும். நீ உடனே மரிப்பது மேல்" என்று தன் சகோதரன் எவ்வளவு கெஞ்சிக்கூப்பிட்டும் செவி கொடாமல் காவற் கூடத்திலிருந்து வெளியே போகப் புறப்பட்டாள்.

இவைகளெல்லாம் ஒற்றுக் கேட்டுக்கொண்டிருந்த சன்னாசி வேடம் பூண்ட அரசன் தான் ஒளிந்திருந்த இடத்தைவிட்டு இஸாபெல்லாளின் எதிரே வந்து "தங்காய், ஒரு வார்த்தை" என்றார்.

இஸாபெல்லாள். தங்களுடைய சித்தம் யாது?

அரசன்.—உனக்கு சாவகாசமுண்டானால் உன்னுடன் சிலகாரியங்களைப்பற்றி பேச ஆசிக்கிறேன். அவ்விஷயங்களும் உன் நன்மையைக் கோரியனவே.

இஸாபெல்லாள்.—எனக்கேது சாவகாசம்; ஆனாலும் தங்கள் சித்தத்திற்குக் காத்துக்கொண்டிருக்கிறேன் என்றாள். சற்றுப் பொறுவென்று அரசன் கிலாடியோவை ஒரு புறமாய் அழைத்துக்கொண்டுபோய் "மகனே உனக்கும் உன் சகோதரிக்கும் நடந்த சம்பாஷணைகளைக் கேட்டுக்கொண்டிருந்தேன். ஆஞ்செலோ பிரபு உன் சகோதரி கற்பின் நிலையில் எவ்வளவு உறுதியாயிருக்கிறாள் என்று பரீக்ஷித்துப் பார்த்தாரே தவிர அவளை கெடுக்க எண்ணினவரல்ல. அவள் குணத்தை அறியவேண்டுமென்று தீர்மானம்கொண்டு அவ்விதம் அவளைச் சோதித்

0111, 2J5H, m
N12



தார். நேர்மையின் அவதாரமான உன் சகோதரி அவரைத் தூஷித்து வெறுத்துவா அவள் மறுத்ததைச் சந்தோஷத்துடன் அங்கீகரித்தார். நான்தான் ஆஞ்செலோ பிரபுவின் ஆத்தும குரு; இது உண்மையென்று எனக்குத் தெரியும். ஆகையால் நீ சந்தோஷமாய் மரணத்திற்கு ஆயத்தம்செய். நிலையற்ற வாழ்வின்மேல் ஆசை வையாதே. நாளைக்கு நீ மரிக்கவேண்டும். அதற்கு முஸ்திப்பாயிரு. முழந்தாளிட்டு மனஸ்தாபப்படு.

கிலாடியோ.—ஐயோ என் சகோதரியின் மன்னிப்பைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஜீவிக்கவேணுமென்கிற ஆசையினால் மதியிழந்தேன் என்று துக்கப்பட்டுக்கொண்டு தன் காவற்கூடத்திற்குள் சென்றான்.

இஸாபெல்லாளுடன் அரசன் தனித்து: "உன்னை அழகினவதாரமாகச் சிருஷ்டித்த கரங்கள் உன்னை நற்குணவதியாய் சிருஷ்டித்தன [illegible]யென்று சந்தோஷிக்கிறேன். உன்னழ[illegible] ஆதமாபோன்ற தேவ இஷ்டப்பிரசாதம் உன்னை என்றும் ரூபவதியாயிருக்கக் கிருபை செய்யக் கடவது. ஆஞ்செலோ உனக்கிழைத்த தீங்கு என் காதிற் பட்டியது. ஆஞ்செலோ பிரபுவும் இவ்வாறு தவறினது எனக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது. உன் சகோதரனைக் காப்பாற்ற நீ வேறு என்ன செய்யப் போகிறாய்? என்றான்.

59854

இஸாபெல்லாள்—விபசாரத்தில் கற்பந் தரிப்பதைக் காட்டிலும் என் சகோதரன் சாவது மேல்

6111, 2J5H. M
N112

என்று தீர்மானித்துவிட்டேன். நமது நல்லரசன், ஆஞ்செலோவின் குணங்களைப்பற்றி எப்படி ஏமாந்து போனார் பார்த்தீர்களா? அவர் திரும்பிவந்தால் அவரிடத்தில் சொல்வேன். ஆனால் என் வார்த்தைகள் வியர்த்தமாம். என்னை அவர் எப்படி நம்புவார்?

அரசன்.—அதில் பிரயோஜனமில்லை. உன் குற்றச்சொல்லை அவர் நம்பவேமாட்டார். ஆஞ்செலோவும் உன்னைச் சோதித்திருப்பான். ஆகையால் நான் சொல்வதற்குக் காது கொடு. நன்மையைக் கருதி எனக்கு ஓர் உபாயம் புலப்படுகிறது. மகளே, நீ கஷ்டமடைந்த ஓர் ஸ்திரீக்கு உதவி புரிவதில் உன் சகோதரனையும் கொடூர சட்டத்தினின்றும் காப்பாற்றலாம். உன்னையும் ஓர்மாசணுகாமல் காப்பாற்றிக்கொள்ளலாம். ஊரைவிட்டு வெளியே போயிருக்கும் அரசனும் ஒருக்கால் திரும்பிவருவானேயாகில் அவனும் சந்தோஷப்படுவான்.

இஸாபெல்லாள்.—அதென்ன? என் மனத்திற்கும் குற்றம் அல்லவெனத் தோற்றும் எதையும் செய்யத் தயாராயிருக்கிறேன்.

அரசன்.—புண்ணியமே பலம், சுசீலம், அஞ்சாது கடலில் வீழ்ந்திறந்த வீர சூரனை பிரடரிக்கின் (Frederick) சகோதரியாகிய மரியானாளை (Mariana) உனக்குத்தெரிந்திருக்குமே.

இஸாபெல்லாள்—ஆம், அவள் நல்லவள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.



அரசன்.—அவள்தான் ஆஞ்செலோ பிரபுவுக்கு நிச்சயதார்த்தம் பண்ணப்பட்டவள். அவள் சகோதரனும் அவளுக்கு கொடுப்பதாகச்சொல்லியிருந்த ஸ்திரீதனமும் கடலில் மூழ்கிப் போனவுடன் பரிசுத்தவானைப் போல் காணப்படும் ஆஞ்செலோ பிரபு அவளை நிராகரித்துவிட்டான்.

இஸாபெல்லாள்.—இதென்ன அநியாயம்? பணத்திற்காகவோ ஆஞ்செலோ அவளைக் கைவிட்டான்.

அரசன்.—யாதொரு தேறுதலுமின்றி அவளைக் கண்ணீர் சொரியவிட்டு அவள்பேரில் அபவாதம் கூறி ஓர் கற்சிலையைப்போல மனமிரங்காமலிருக்கின்றான்.

இஸாபெல்லாள்.—சுவாமீ, இதற்கு நான் செய்யக்கூடியதென்ன? என்றாள்.

ஆஞ்செலோ எவ்வளவுதான் வெறுத்தாலும் மரியானாளுக்கு அவன்மேல் கொண்ட காதல் சற்றுங் குறையவில்லை என்று கூறி சன்னாசி வேடம் பூண்ட அரசன் அவளுக்குத் தன் ஏற்பாடுகளை எடுத்துரைத்தார். அதாவது: "ஆஞ்செலோ பிரபுவின் துர் ஆசைகளுக்கு இணங்கினவள் போல் இஸாபெல்லாள் நடித்து அவன் கேட்டுக்கொண்ட பிரகாரம் நடுநிசியில் அவனிடம் வருவதாக ஒப்புக்கொண்டு அவளுக்குப் பதிலாக மரியானாளை அவள் புருஷனிடம் அனுப்பவேண்டியதென்பதே." என்னருமை மகளே இதற்கு நீ யாதொன்றும் பயப்படவேண்டாம்.

ஆஞ்செலோ அவள் புருஷன். அவர்களைச் சேர்த்து வைப்பதில் பாவமில்லை. யாதொரு தப்பிதமுமில்லை என்றான்.

இஸாபெல்லாள், இந்த ஏற்பாட்டிற்கு இணங்கி சந்தோஷத்தோடு போலி சன்னாசி கூறியபடி ஆஞ்செலோ பிரபுவினிடம் போனாள். இந்த ஏற்பாட்டை மரியானாளிடம் தெரிவிக்க சன்னாசியும் அவள் வீட்டுக்குப்போனார். மாறு வேடம் பூண்ட அரசனும் அடிக்கடி இந்த நிற்பாக்கிய ஸ்திரீயை சந்திக்கப்போய் அவள் வாய்மொழியாகவே சகல சங்கதிகளையும் தெரிந்து கொண்டு அவளுக்கு அநேக வேத மொழிகளைக்கூறி ஆறுதல் சொல்லிவருவார். மரியானாளும் இவரைப் பரிசுத்த சன்னாசியென்றே நம்பி இவர் வார்த்தைகளைக் குருவார்த்தைபோல் நம்பிவந்தாள்.

ஆஞ்செலோவின் அரண்மனைக்குப் பின்னால் மதிள் சூழ்ந்த ஓர் நந்தவனமுண்டு. அந்த நந்தவனத்தின் அமைப்பும் அதில் புஷ்பித்திருக்கப்பட்ட ஒவ்வொரு புஷ்பத்தின் அழகும்:—சலமோன் (Solomon) என்னும் அரசனும் தன் அலங்காரத்தில் ஓர் சிறு அற்ப லீலிபுஷ்பத்திற்குச்சமானமாக வில்லையென்றால் நான் எதற்கு ஒப்பிடுவேன்? ஒவ்வொரு புஷ்பமும் தன்னைச் சிருஷ்டித்த ஈஸ்வரன் மகிமையை தன்னழகிய இதழ்களைத் திறந்து பிரஸ்தாபித்தன. அந்த நந்தவனம் தெய்வலோகத்திற்கொத்திருந்தது. ஆனால் அதின் சுதந்தரவாளியாகிய



ஆஞ்செலோ மட்டும் ஈஸ்வர பஜனையை மறந்து அவருக்கு விரோதமாய் எவ்வித குற்றம் கட்டிக்கொள்ளலாமென்று யோசித்துக்கொண்டு அவன் பக்கலில் நின்ற இஸாபெல்லாளுக்கு அந்த நந்தவனத்தையும் அதனருகிலுள்ள திராக்ஷ தோட்டங்களையும் இந்நந்தவனத்திற்கணுகும் வழிகளையும் விவரமாய் கூறி நந்தவன திராக்ஷ தோட்ட வாயில்களை இரவில் ஒருவருமறியாமல் திறக்க இரண்டு திறவுகோல்களையும் கொடுத்தான். இவைகளை பெற்றுக்கொண்டு இஸாபெல்லாளும் சன்னாசி குறித்த விடமாகிய மரியானாளின் வீட்டிற்கு வந்து சன்னாசியிடம் தான் போய்வந்த காரியத்தைப்பற்றி விவரமாய் கூறினாள்.

அரசன்.—உங்களுக்குள் ஒருவரையொருவர் தெரிந்துகொள்ளும்பொருட்டு ஏதாவது அடையாளங்கள் ஏற்படுத்திக்கொண்டிருந்தால் அதை மரியானாளுக்குத் தெரியப்படுத்து என்றார். அதற்கு இஸாபெல்லாள் யாதொன்றுமில்லை. இருட்டில் போகவேண்டியது தான். தன்னுடன் ஒரு வேலைக்காரியை அழைத்துக்கொண்டுவரப் போவதால் அதிக நேரம் தங்க முடியாதென்று சொல்லியிருக்கிறேன் என்றாள். அரசன் இஸாபெல்லாளின் சாமர்த்தியத்தை வியந்து மரியானாளைப் பார்த்து நீ யாதொன்றும் பேசவேண்டியதில்லை. திரும்பிவரும்போது "இனி என் சகோதரன் ஞாபகமிருக்கட்டும்" என்று அமர்ந்த குரலினால் சொல்லிவா என்றார்.

அன்று இரவு இஸாபெல்லாள் மரியானாளை குறித்த இடத்திற்குக் கூட்டிப்போய் இந்த ஏற்பாட்டினால் தன் கன்னியத்தையும் தன் சகோதரனுடைய உயிரையும் காப்பாற்றியதினிமித்தம் சந்தோஷமடைந்தாள்.

ஆனால் அரசனுக்கு மட்டும் கிலாடியோவின் உயிர் காப்பாற்றப்படுமென்பதில் சந்தேகம். அவர் உடனே நடுநிசியில் சிறைக்கூடத்திற்குப் போனார். அவர் அப்படி போயிராவிட்டால் அன்று இரவே கிலாடியோவின் தலை வெட்டப்பட்டிருக்கும். ஏனென்றால் அரசன் சிறைக்கூடம் வந்து நுழைந்த அதே சமயத்தில் கிலாடியோவின் தலையை வெட்டி தன்னிடம் உடனே அனுப்பப்படவேண்டுமென்று இராஜபிரதிநிதியின் கட்டளையைக் கொண்டுவந்த சேவகனும் உள்ளே நுழைந்தான். இந்தக் கட்டளையைக் காராகிரகத்தின் அதிகாரி மூல்யமாய் அறிந்த அரசன் அதிகாரியிடம் "தலைவனே நான் படித்த சாஸ்திரங்கள் மெய்யானால் நீர் உண்மையும் நிலைதவறாத ஊழியனுமென்ற உன் முகக் குறிகளால் அறிகிறேன். நீ ஆஞ்ஞாபிக்கப்பட்டிருக்கிறபடி தலை வெட்டப்பட தீர்மானிக்கப்பட்டிருக்கிற நிற்பாக்கிய கிலாடியோ, அவனைத் தண்டித்த ஆஞ்செலோவைப் பார்க்கிலும் அவ்வளவு அபராதியல்லவென்று உனக்கு எண்பிக்க நாலுநாள் தவணை கொடு" என்றார்.

இவர் அரசன் என்று அறியாமல் அவர் காணப்படுகிறபடி ஓர் பரிசுத்த வெறும் சன்னாசி என்று எண்ணிக்



கொண்டிருக்கும் அதிகாரி நான் என்ன செய்யவேண்டும் சுவாமீ என்றான்.

சன்னாசி.—பிரதிநிதியின் கட்டளையை நிறைவேற்றுவதில் தாமதிக்கவேண்டும்.

அதிகாரி.—ஐயோ அது எப்படி கூடும்? எனக்கு அனுப்பப்பட்டிருக்கிற கட்டளையில் நேரம் குறிக்கப்பட்டிருப்பதல்லால் சொல்லப்பட்டவனுடைய தலையையும் ஆஞ்செலோவுக்கு அனுப்பவேண்டியவனாயிருக்கிறேன். இதில் நான் தவறுவேனானால் கிலாடியோவின் கதி எனக்காகும்.

சன்னாசி.—அப்படியல்ல, காராகிரகத்தில் வெகுநாள் அடைபட்டிருக்கிற பெர்நார்த்தின் (Bernardine) என்பவனுடைய தலையை வெட்டி அனுப்பு.

அதிகாரி.—ஐயோ இவர்கள் இருவரையும் ஆஞ்செலோ அறிவார்.

சன்னாசி.—சாவு ஓர் பெரிய வேஷமாறி, தலையைச் சிரைத்து முகத்தை க்ஷவரம் செய்துகொண்டுபோகச் சொல்லு, அவர் கேட்டால் மரணமடைந்தவனுடைய ஆசை அதுவென்று சொல். இதில் உனக்கு யாதொரு தீங்கும் நேரிடாமல் என் சபைக்குப் பாதுகாவலரான அர்ச்சிஷ்டவரை மன்றாடுவதல்லாமல் என் உயிரைக் கொடுத்து உனக்காக மன்றாடுவேன்.

அதிகாரி.—சுவாமீ என்னை மன்னிக்க வேண்டும், நான் செய்த சத்தியத்திற்கு அது அழகல்ல.

சன்ஞசி.—நீ சத்தியம் செய்து கொடுத்தது அரசனுக்கா? பிரதிநிதிக்கா?

அதிகாரி.—அரசனுக்கும் அவருக்குப் பதிலாயிருக்கப்பட்டவர்களுக்குந்தான்.

சன்ஞசி.—உன் செயலை அரசன் ஒத்துக்கொண்டால் நீ செய்வது குற்றமாகாதே.

அதிகாரி.—அரசன் ஒத்துக்கொள்வாரென்பது என்ன நம்பிக்கை.

சன்ஞசி.—நம்பிக்கை மாத்திரமல்ல, நிச்சயம். என்னுடைய வாய் மொழியும் நான் கொண்ட உடையும் உனக்கு ஓர் உறுதியைத் தாராமல் நீர் பயப்படுகிறபடியால் இதோபாரும், அரசன் முத்திரையும் அவர் கையெழுத்தும். அவர் கையெழுத்து உமக்கு நன்ருய் தெரிந்திருக்கும். அவருடைய முத்திரைக்கும் நீர் அன்னியனல்ல.

அதிகாரி.—இதைக் கண்ட உடனே திடுக்கிட்டு: ஆம்! ஆம்! நான் அறிவேன் என்ருன். சன்ஞசி இந்தக் கடிதத்திலிருப்பது அரசன் வருகையைப்பற்றி தெரிவித்திருக்கிருர் என்ருன். இதைக் கேட்ட அதிகாரி சன்ஞசி அரசனுடையபிரிய சிநேகிதனென்றும் அவரிடமிருந்து இவருக்கு இரகசிய கட்டளை வந்திருக்குமென்று நினைத்து சன்ஞசி சொற்படி கேட்பதாக ஒட்டம்பட்டான்.

அன்று சிறைக்கூடத்தில் வெகுநாளாய் அடைபட்டிருந்த ரகோசின் (Ragozine) என்னும் ஓர்பெரிய கப்பற்



கொள்ளைக்காரன் வியாதியிஞல் இறந்தான். அவன் கிலாடியோவை நிறத்திலும் உயரத்திலும் வயசிலும் ஒத்திருந்தான். கிலாடியோவின் தலைக்குப் பதிலாய் இவன் தலையைக்கொய்து ஆஞ்செலோவிடம் அனுப்புவதாய் ஒப்புக்கொண்டான்.

பிறகு அரசன் தான் செய்ய நினைத்திருந்த பிரயாணம் சிலஅசந்தர்ப்பங்களிஞல் நின்றுவிட்டதாகவும் மறுநாள் காலையில் தன் தேசத்திற்குத் திரும்பிவருவதாகவும், பட்டணத்தின் ஆசாரவாயிலில் தன்னைச்சந்தித்து இராஜ அதிகாரத்தை அவ்விடத்திலேயே தன்னிடம் ஒப்புக்கொடுக்கவேண்டுமென்றும், தன் பிரஜைகளில் யாராவது தங்களுக்குள்ள குறைகளைத் தெரிவித்துக்கொள்ளவேணுமாஞல் தான் பட்டணப் பிரவேசமாகும்போது பட்டண ஆசார வாசலினருகே ஆஜராகி மனு மூலியமாய் தெரிவித்துக்கொள்ளும்படி பறைசாற்றுவிக்கவேண்டுமென்றும் ஆஞ்செலோ பிரபுவுக்கு ஓர் லிகிதம் எழுதி அனுப்பினுர். தான்செய்த உபாயத்தால் தன் சகோதரன் உயிர் மன்னிக்கப்பட்டிருக்குமென்று எண்ணின நம் கற்புக்கரசி இஸாபெல் அதிகாலையில் காராகிரகத்திற்கு ஓடிவந்தாள். சந்நியாசி வேடம் பூண்ட அரசனும் வெகு துக்கப்படுபவர்போல் பாவனை செய்துகொண்டு அவ்விடத்திலேயே அவள் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

இஸாபெல்லாள்.—"ஆஞ்செலோவிடமிருந்து என் சகோதரன் விடுதலைப் பத்திரம் வந்ததோ" என்று

வினவினாள். அரசனும் "ஆம் ஆஞ்செலோ உன் சகோதரனை இவ்வுலகத்திலிருந்து விடுதலை செய்துவிட்டான். அவன் தலையை வெட்டி ஆஞ்செலோவிடம் அனுப்பிவிட்டார்கள்" என்றார்.

தன் சகோதரன் மன்னிப்பு நிச்சயம் என்று நம்பின இஸாபெல் "அப்படியல்ல, என்னைப் பரிகசிக்க வேண்டாம்" என்றாள்.

அரசன்.—நான் சொல்வது வாஸ்தவமே, ஆனால் பொறுமையாயிரு என்றார்.

"ஐயோ மோசம் பண்ணினானே பாவி, அவன் கண்ணைப் பிடுங்கிவிடுகிறேன்" என்று கோபாவேசத்தால் பொங்கினாள். பிறகு துக்கம் மேலிடவே "ஐயோ நிற்பாக்கிய கிலாடியோ, சகோதரனை இழந்த துர் அதிஷ்டியானேனே. துஷ்ட பூலோகமே, பழிகார ஆஞ்செலோ" என்று பிரலாபிக்கத் தொடங்கினாள்.

அரசன்.—"தங்காய், உன் வசைச் சொற்கள் ஆஞ்செலோவை ஒன்றும் பண்ணா; உனக்கும் யாதொரு பிரயோஜனத்தைத் தரா. ஆகையால் அதை விட்டொழி, உன் பாரத்தை ஆண்டவர்பேரில் போட்டு நான் சொல்வதைக்கேள். அது முற்றிலும் உண்மையென்று நம்பு. நீ அழாதே. அரசன் நாளை ஊருக்குத் திரும்பிவருகிறார். நம்மடத்து சன்னாசிகளில் ஒருவராகிய அவருடைய ஆத்தும குருவினிடமிருந்து இது செய்தி அறிந்தேன். அவர் எஸ்காலுஸ் பிரபுவுக்கும் ஆஞ்செலோவுக்கும் லிகிதம் கொண்டுபோயிருக்கிறார். அவர்களும் நாளை



அரசனை ஆசாரவாசலில் சந்தித்து அவருடைய அதிகாரத்தை ஒப்புவிக்க பிரயத்னம் செய்கிறார்கள். நான் குறிப்பிக்கும் நல்வழியில் நீ நடக்க உடம்படுவாயானால் உன் அபிப்பிராயத்தையும் அரசனிடம் தெரிவிக்கலாம் என்றார்." தங்கள் சித்தத்தின்படியே ஆகட்டுமென்றாள் இந்தக் கடிதத்தை நம்மடத்து சகோதரர்களில் ஒருவராகிய பேதுரு (Friar Peter) சன்னாசியாரிடம் கொடுத்து அவரை இன்றிரவு மரியானாள் வீட்டிற்கு வரும்படியாய் நான் கேட்டுக்கொண்டதாகச்சொல். உன்னுடையவும் மரியானாளுடையவும் விஷயங்களைப் பற்றி அவருக்கு அறியப்பண்ணி உங்கள் இருவரையும் அரசன் முன் அழைத்துக்கொண்டுபோக ஏற்பாடு செய்கிறேன். ஆஞ்செலோவின் செய்கைகளை அவன் எதிரிலேயே அரசனிடம் கூறு. நானோ பரிசுத்த சத்தியத்தினால் கட்டப்பட்டிருப்பதால் நான் அவ்விடம் வரக்கூடாது. இந்தக் கடிதத்தைக் கொண்டுபோ. உன் கண்களிலிருந்து பொங்கி வரும் கண்ணீர்களைச் சந்தோஷத்தோடு களைந்தெறி. தவறுதலானவழிகளில் உன்னை நான் செலுத்தேன் என்பதற்கு நான் கொண்டிருக்கும் தவஉடையேஆதாரமென்று இஸாபெல்லாளைத்தேற்றி அனுப்பிவிட்டார்.

அரசன் லிகிதத்தைப் பெற்ற ஆஞ்செலோவும் திடுக்கிட்டான். என்ன ஆச்சரியம்! ஊரைவிட்டுப் போவதாக சகல காரியங்களையும் என்னிடம் ஒப்புக்கொடுத்துப்போய் இன்னும் இரண்டுநாள் ஆகவில்லை. அதற்குள் அரசன் திரும்பிவருவதாக எழுதுகிறார், என்ன

அவருக்குப் பயித்தியமா. அதுவுமன்றி அவருடைய அதிகாரத்தை பட்டண ஆசார வாசலிலே ஒப்புக்கொடுக்கவேண்டுமாம்! இதன் கருத்தும் விளங்கவில்லை. பிரஜைகள் தங்களுக்குள்ள குறைகளை அரசன் பட்டணப் பிரவேசம் ஆகும்போதே என்னத்துக்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். இந்தக் கடிதம் எனக்கு அச்சத்தைத் தருகிறது. ஒருக்கால் நாம் செய்த பாவம் அரசனுக்குத் தெரியுமோ. அம்மாது தன் கற்பினழிவை பகிரங்கமாய் நடுத்தெருவில் அரசனிடம் கூறுவாளோ. எவ்விதம் கூறுவாள். அவளைத்தான் யார் நம்புவார்கள். அவன் உயிருடனிருந்தால் ஒருக்கால் அவளுக்கு பரிந்து பேசலாம் என்று இவ்வாறு பலவிதமாய் தனக்குள் ஆலோசித்துக்கொண்டு அரசனை எதிர்கொண்டு பட்டணப் பிரவேசம் செய்துவைக்கப் புறப்பட்டான்.

அரசனும் தன் சன்னாசி உடைகளைக் களைந்தெரிந்து தன் சுய உடை ஆபரணங்களோடு பிரஜைகள் ஆனந்தத்தோடு புடைசூழ வியன்னா பட்டண ஆசார வாயிலண்டை வந்தான். ஆஞ்செலோ பிரபுவும், எஸ்காலுஸ் பிரபுவும், இன்னும் மற்றப் பிரபுக்களோடு அரசனை எதிர்கொண்டழைக்க அவ்விடமே வந்து சேர்ந்து அரசனுக்கு நல்வரவு கூறினார்கள். அரசனும் ஆஞ்செலோ பிரபுவைச் சிலாகித்து வந்தனமளித்தான். அத்தருணத்தில் பேதுரு சன்னாசியால் அழைத்துக்கொண்டுவரப்பட்ட இஸாபெல்லாள் ஓவென்றலறி அரசன் பாதத்தில் விழுந்தாள். "இராஜேஸ்வரா நியாயம் செலுத்தும், தவறி



ழைக்கப்பட்ட இக்காரிகையின்பேரில் கண்ணோக்கியருளும். இன்னும் நான் கன்னியென்பேனே. உத்தமப் பிரபு என் குறைகளைத் தீர்க்காமல் அப்புறம் போகாதேயும். நியாயம், நியாயம், நியாயம். நியாயம் செலுத்தியருளும் என்று கதறினாள்.

அரசன்.—உன் குறை யாது? உனக்குத் தீங்கிழைத்தவர்கள் யார்? சுருக்கமாய்ச் சொல். இதோ சத்தியவந்தனான ஆஞ்செலோ பிரபுவுமிருக்கிறார். அவரிடம்தெரிவி. உனக்கு நியாயம் செலுத்துவார்.

இஸாபெல்லாள்.—ஓ உத்தமாதிபதி பசாசினிடத்தில் இரக்ஷணியம் கேட்கவோ? தாமே என் குறைகளைக் கேட்டருளும். கேட்டு நான் சொல்வதை நம்பாமல் என்னையே தண்டிப்பீரோ, அல்லது என் குறைகளுக்குத் தக்கபரிகாரம் செய்வீரோ, எதுவானாலும்தாமே எனக்குச் செவிகொடுக்கவேண்டுமென்று மன்றாடினாள். அதற்குள் ஆஞ்செலோ பிரபு முன்வந்து "அரசனே, நீதியின் பிரகாரம் தண்டிக்கப்பட்ட அவள் சகோதரனுக்காக என்னிடம் மன்றாடினாள். இப்போது அவள் மனது பேதித்து இருப்பதாகத் தோன்றுகிறது" என்றாள்.

இஸாபெல்லாள்.—என் சகோதரன் நீதியின் பிரகாரந்தான் தண்டிக்கப்பட்டானோ?

ஆஞ்செலோ.—துக்கத்தினால் பேசுகிறாள், ஆச்சரியமல்ல.

இஸாபெல்லாள்.—நான் பேசுவது ஆச்சரியமல்ல, ஆஞ்செலோ ஆணையிட்டுப் பொய்ச் சத்தியம் செய்வது

ஆச்சரியமல்லவா? ஆஞ்செலோ கொலைக்காரனாவது ஆச்சரியமல்லவா? ஆஞ்செலோ கற்பழிக்கும் திருடனென்பது ஆச்சரியமல்லவோ? ஆஞ்செலோ இளங் கன்னியர்களின் கற்பழிக்கும் கள்ள ஞானியாவது ஆச்சரியமல்லவோ? என்றாள். இவைகளைக் கேட்ட அரசன் இவை ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! பதின்மடங்கு ஆச்சரியந்தான் என்றார்.

இஸாபெல்லாள்.—இவன் ஆஞ்செலோ என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவும் உண்மைதான் நான் சொல்லுவதும் உண்மை உண்மைதான்.

அரசன்.—நிர்ப்பாக்கியவதி! இவள் புத்தி மாறாட்டத்தால் பேசுகிறாள், இவளை அப்புறம் கொண்டுபோங்கள்.

இஸாபெல்லாள்.—அரசனே, இப்பாழுலகத்தைத் தவிர நாம் சுகிக்கக் கருதும் மற்றோருலகமுண்டென்னும் உம்முடைய விசுவாசத்தின்பேரில் ஆணையிட்டு மறிக்கிறேன். என்னைப் பயித்தியக்காரியென்று எண்ணி என்னைவிட்டு விலகாதேயும். தோற்றத்தைக்கொண்டு ஏமாறவேண்டாம். அதிதுஷ்ட துன்மார்க்கனும் ஆஞ்செலோவைப்போல் பரிசுத்தவானாகக் காணப்படுவது கூடாதகாரியமோ? ஆஞ்செலோவும் தன் பரிசுத்த வேஷத்தால் மறைத்துவைத்திருப்பது கொஞ்சமான துஷ்டத்தனமோ?

அரசன்.—இவள் பயித்தியம் பிடித்தவளே. பயித்தியத்திலும் ஓர்வித நியாயத்தோடு பேசுகிறாள்; நீ என்ன சொல்லப்போகிறாய் என்று வினவினார்.



இஸாபெல்லாள்.—விபசாரக் குற்றத்திற்காகத் தலையிழக்கத் தீர்மானிக்கப்பட்ட கிலாடியோவின் சகோதரி நான். மரணதண்டனை விதிக்கப்பட்ட என் சகோதரன் தனக்காக ஆஞ்செலோவிடம் பரிந்து பேச தவவேடம் பூண உத்தேசித்திருந்த என்னை அனுப்பினான். நானும் அந்த நாசக்காரனை துஷ்ட பிரதிநிதியிடம் போனேன்

அரசன்.—பயித்தியக்காரத்தனமாய் பேசாதே.

இஸாபெல்லாள்.—மன்னியும்.

அரசன்.—பிறகு,

இஸாபெல்லாள்.—அரசனே நான் அவன் காலில் எப்படி விழுந்தேன், எப்படிக் கெஞ்சினேன், அவன் எப்படி என்னை மறுதலித்தானென்று நீட்டாமல் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். என்மாசற்ற கற்பை அவன் காமவிகார தூர்த்த இச்சைகளுக்குக் கையளித்தாலல்லாது என் சகோதரனின் மன்னிப்பைத் தரேனென்று பிடிவாதம் செய்ததின்பேரில் சகோதர வாஞ்சனை என் அவமானத்தை மறைத்து அவனுக்கு இணங்கும்படி செய்வது என்று வெட்கத்தோடு கூறுகிறேன். இத்துஷ்டன் தன் இச்சைகளை நிறைவேற்றிக்கொண்டு அதிகாலையில் என் சகோதரனின் தலையை வாங்கும்படி உத்தரவளித்தான்.

அரசன் அவள் கதையை நம்பாதவன்போல் பாவனை செய்து "துஷ்டை நீ சொல்வது என்னவென்று யோசியாமல் பேசுகிறாய், அல்லது என் பிரதிநிதியை அவமானப்படுத்தவேணுமென்ற எண்ணத்துடன் உன்னையேவி

விட்டனுப்பியவன் யார்? சேவகர்காள், இவளைச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோங்கள். இப்படி அவதூறாய் அவளைப் பேசவிட்டு வேடிக்கை பார்ப்போமோ?" என்றார். உடனே பேதுரு சன்னாசியார் ஓடிவந்து: அரசனே இவள் சொல்வது முற்றிலும் அபத்தமென்பது இதோ நிற்கும் மரியானாளைக்கேட்டால் நன்குவிளங்கும் என்றார். உடனே மரியானாளும் எதிரே வந்து: மகிமை தங்கிய அரசனே, வானத்திலிருந்து வெளிச்சமும், பேச்சிலிருந்து உண்மையும், உண்மையிலிருந்து புண்ணியமும் உண்டாவதுபோல நான் ஆஞ்செலோ பிரபுவின் மனைவி என்று உறுதி கூறுகிறேன். அவர்பேரில் இஸாபெல் கூறியதனைத்தும் அபத்தம். அவள் சிங்காரவனத்தில் அவருடன் இருந்ததாகச் சொல்லும் அந்நேரத்தில் நான்தான் அவருடன் தனித்திருந்தேன். நான் சொல்வது அபத்தமானால் உம்முடைய பாதத்திலேயே என்றும் கற்சிலையாய் மாறக்கடவேன் என்றாள்.

இஸாபெல்.—நான் சொல்வது பொய்யானால் லூடோவிக் (Lodowick) என்னும் சன்னாசியாரை வரவழைத்துக் கேளுமென்றாள். அரசனே மாறுவேடம் பூண்டு சன்னாசிஉடை தரித்திருந்தபோது அப்பெயரைத் தரித்திருந்தார். அவர் இஸாபெல்லின் கற்புநிலை அந்நாட்டிலுள்ளவர்களுக்கு விளங்கும்படியாய் இவ்வித ஏற்பாடுகள் அவரே செய்திருந்தார் என்பது நாம் சொல்லாமலே எளிதில் விளங்கும். ஆனால் ஆஞ்செலோ இதுவரையிலும் இவ்வித எதிரிடையான சாட்சியங்களால் தன்னுடைய குற்றம் எண்பிக்கப்படாதென்று நினைத்



திருந்தான். பிறகு அரசனை நோக்கி,, அரசே, இதுவரையிலும் இவர்கள் பயித்தியக்காரர் என்றும், இவர்கள் சாட்டும் குற்றம் வெறும் வேடிக்கையென்றும் நினைத்திருந்தேன். ஆனால் யாரோ ஒருவன் ஏதோ கெட்ட எண்ணங்கொணடு என்னை அவமானப்படுத்தவேண்டி இவர்களை ஏவி விட்டிருப்பதாகத் தோற்றுகிறது. இதைத் தீர விசாரிக்கவேண்டுமென்றான். அரசனும் ஆம், உம்முடைய இஷ்டப் பிரகாரம் அவர்களைத் தண்டிக்கவும் உத்தரவு கொடுக்கிறேன். எஸ்காலுஸ், நீரும் ஆஞ்செலோ பிரபுவுடன் உட்கார்ந்து இவர்கள் சொல்வதை தீரவிசாரியும். ஓய் புத்திகெட்ட சன்னாசி, நீர் இவர்களை அழைத்துக்கொண்டுவந்து உமக்குத் தெரிந்த சகல பரிசுத்தவான்கள் பேரால் ஆணையிட்டாலும் பிரயோஜனமில்லையென்று நினையும் என்று சன்னாசியாரையும் கண்டிக்க,

பேதுரு சன்னாசியார்:—என் ஆண்டவனே, இவர்களை ஏவிவிட்ட லூடோவிக் சன்னாசியாரை வரவழைப்பீராகில் உமக்கு அவர் சகலமும் தெரிவிப்பார், அவருடைய இருப்பிடம் ஜெயிலதிகாரிக்குத் தெரியுமென்றார். பிறகு அரசன் ஆஞ்செலோ எஸ்காலுஸ் பிரபுக்களைப் பார்த்து நான் போய் சற்று இளைப்பாறி வருகிறேன். நீங்கள் இருவரும் அந்த லூடோவிக் என்னும் சன்னாசியையும் வரவழைத்து, இப்பெரும் அபவாதத்தைத் தீர விசாரியுங்கள் என்று சொல்லி அரண்மனைக்குச் சென்றார்.

அரண்மனைக்குட் சென்ற அரசன் தன் உடைகளைக் களைந்து சன்னாசி உடை தரித்துக்கொண்டு ஜெயில் காப்

பாளன் பின்தொடர நியாய ஸ்தலம்வந்து சேர்ந்தார். இவரைக்கண்டவுடன், ஆஞ்செலோ பிரபுவுடன் கூட இருந்து இராஜகாரியம் பார்த்துவந்த எஸ்காலுஸ் பிரபு:- ஐயா இப்படி வாரும். ஆஞ்செலோ பிரபுவின் பேரில் அபவாதம்கூற இந்த ஸ்திரீகளைத் தூண்டிவிட்டது நீர் தானோ? நீர்தான் அவர்களை அப்படி ஏவிவிட்டதாக அந்தப் பெண்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

அரசசன்னாசி "அது சுத்த பொய்" என்று சற்று மஞ்சாமல் கூறினார்.

எஸ்காலுஸ்:—என்ன தைரியம்! நீர் நிற்கும் இடம் இன்னதென்று உமக்குத் தெரிகிறதா?

அரசன்: உம்முடைய ஸ்தானத்திற்கும் மகிமையா? ஆம் ஜுவாலித் தெரியும் பேயின் சிம்மாசனத்திற்கும் ஒருவேளை மரியாதை செலுத்த வேண்டியதுதான் அரசன் எங்கே? நான் சொல்வதை அவர்தான் கேட்க வேண்டும்.

எஸ்காலுஸ்:—அரசன் எங்களுக்குள் இருக்கிறார் அவர் அதிகாரத்தை வகித்த நாங்கள்தான் அரசன். நீர் பேசும், நாங்கள் கேட்கிறோம். நியாயமாய் பேசும்.

அரசன்:—தைரியமாய்ப் பேசுகிறேன்:—

ஐயோ! ஏழைப் பெண்களே, இந்த நரிகளிடத்தில் ஆட்டுக்குட்டியைத் தேடவந்தீர்களோ? நீங்கள் தேடவந்த பரிகாரத்திற்கு ஒரு நமஸ்காரம். அரசன் போய் விட்டாரோ? நீங்கள் அடையத் தேடிவந்த பரிகாரமும் அவருடன் போய்விட்டது. நியாயம் கிடைக்கவேண்டுமென்று தேடிவந்த உங்களை நீங்கள் குற்றம் சாட்டும்



அதிதுன்மார்க்க அந்தத் துஷ்டனையே தீர்மானிக்கும்படி அரசன் விட்டுப் போனதும் அநியாயம்.

எஸ்காலுஸ் இதைக் கேட்டதும் கோபங்கொண்டு அயோக்கிய சன்னாசி, இந்த ஸ்திரிகளைத் தூண்டிவிட்டு இப்பரிசுத்தவான் பேரில் அபவாதம் கூறியதுபோதாதென்றோ, உன்னுடைய அசுத்த வாயாலும் இவரை அதிதுன்மார்க்க துஷ்டனென்றாய். அவரை விட்டு அரசன் மேல் தாவி அரசன் செய்தது அநியாயமென்றாய். சேவகரே, இவனை அப்புறம் கொண்டுபோய் சித்ரவதை செய்து கொல்லுங்கள். உன்னைச் சதை சதையாய்க் கழிக்கச் சொல்லுகிறேன் உன் காரணத்தைத்தான் கேட்போமே. அரசன் செய்தது என்ன அநியாயமடா? சொல் என்றார்.

அரசன்:—கோபித்துக்கொள்ள வேண்டாம். அரசன் என்பேரில் விரலை நீட்ட தைரியப்படமாட்டான். நான் அவனுக்கு ஊழியனல்ல. இந்தப் பிரஜாபத்தியத்தில் எனக்கு யாதொரு சம்பந்தமுமில்லை. நான் வேடிக்கையாய் இந்த வியன்னா நகரில் நடப்பவைகளைக் கவனித்தேன். அவ்விடத்தில் துன்மார்க்கம்பொங்கி வழியக்கண்டேன். எல்லாக்குற்றங்களையும் தண்டிக்க தேச சட்டமிருந்தும் குற்றங்கள் அனுமானிக்கப்பட்டு தேச சட்டங்கள் அம்பட்டன் குப்பைக்குச் சமானமாயிருக்கின்றன.

எஸ்காலுஸ்:—என்ன இராஜ தூஷணம்! என்ன தேச நிந்தை! அவனைச் சிறைச்சாலைக்குக் கொண்டு

போங்கள். இப்படிப்பட்டவனோடு நாம் பேச்சு வார்த்தை முதலாய் வைத்துக்கொள்ளக்கூடாது. சிறைக்காப்பாளன் எங்கே? சிறைச்சாலைக்குக் கொண்டுபோங்கள் அவனைக்கொண்டு அடையுங்கள். அவனை வாயைத்திறக்கவொட்டாமல் வாய்ப்பூட்டு போடுங்கள்.—அந்தச் சிறுநகைப்புக்காரிகளையும், அவர்களுடைய மற்றொரு கூட்டாளியாகிய பேதுரு சன்னாசியையும் கொண்டுபோங்கள் என்றார். உடனே ஜெயில் காப்பாளன் அரசன்மேல் கைபோட,

அரசன்:—என்னைத் தொடாதே.

ஆஞ்செலோ:—என்ன தடுக்கிறான்! சேவகர்காள், அவனைப் பிடித்துக் கட்டுங்கள்.

சேவகன்:—மொட்டைச் சன்னாசி, புளுதுணிப்பயலே, உனக்கும் தவவேடம் வேண்டுமோ? உன் போக்கிரிச் சடலத்தையெல்லோரும் பார்க்கட்டும் என்று சொல்லிக்கொண்டே அரசன் உடுத்தியிருந்த சன்னாசி உடைகளைக் கிழித்தெறிந்தான். சன்னாசி உடைகளுக்குள் அணிந்திருந்த ராஜ சின்னத்துடன் அரசன் காணப்பட எல்லோரும் திடுக்கிட்டார்கள்.

அரசன்:—அவர்கள் மூன்று பேரையும் உடனே விட்டுவிடு: எஸ்காலுஸ், நீர் சொன்னவற்றையெல்லாம் நான் பொறுத்துக்கொள்ளுகிறேன். உன் ஸ்தானத்தில் உட்கார். ஆஞ்செலோ உன் ஸ்தானத்தை விட்டிறங்கு. இன்னும் அந்த ஸ்தானத்தை வகிக்க உனக்குத் தைரியம் உண்டோ? என்றார். பிறகு இஸாபெல்லாளின்



பக்கமாய் திரும்பி இஸாபெல் என்னருகில் வா. உன் சன்னாசி இப்போது உன் அரசனாயிருக்கிறான். என் உடைகளோடு என் இருதயத்தையும் களைந்து எறிந்துவிடவில்லை. என் ஊழியத்தில் இன்னும் நிலைத்திருக்கிறேன் என்றார்.

இஸாபெல்லாள்.—ஓ என் ஆண்டவனே, உமது இராஜ மகிமையை அறியாமல் உமது அடியார்களில் ஒருவராகிய யான் உம்மை வேலை வாங்கினேன் என்றாள்.

அரசன்:—"இஸாபேல்! உன் சகோதரனின் மரணதண்டனையைத் தடுக்காமல் உன் சகோதரன் கொல்லப்படப் பார்த்திருந்த யான் உன் மன்னிப்பைக் கேட்கவேண்டியதல்லால் நீ என் மன்னிப்பைக் கேட்கவேண்டியதில்லை" என்று இன்னும் இஸாபெல்லாளின் மனதைரியத்தைச் சோதனைசெய்யவேண்டி அவள் சகோதரன் உயிர்பிழைத்திருப்பதை அவளுக்கு அரசன் அறிவிக்கவில்லை.

ஆஞ்செலோவோ நடுநடுங்கி: என் ஆண்டவனே! என் குற்றங்களை ஓர் தெய்வம்போல் கண்ணாரக்கண்ட உமக்கு முன்பாக இன்னும் பாசாங்கு செய்வேனேயாகில் பெரும் பாதகனாவேன். என் அவமானத்தைப் பகிரங்கப்படுத்த என் பேரில் இன்னும் விசாரணை செய்யவேண்டாம். நானே அதை ஒப்புக்கொள்ளுகிறேன். உடனே என்பேரில் உம்முடைய தண்டனையை விதியும், எனக்கு உடனே மரணதண்டனை விதித்து என் உயிரை வாங்கும் அனுக்கிரகம் தான் உம்மிடத்தில் மன்றாடுகிறேன் என்றான்.

அரசன்:—ஆஞ்செலோ உன் குற்றம் பிரத்தியக்ஷமானது. கிலாடியோ இறந்த அதே கொலைக்களகத்தில் நீயும் சாகக் கட்டளையிடுகிறேன். அவனை உடனே கொண்டுபோங்கள். மரியானாளே அவனுடைய ஆஸ்திக்குச் சுதந்தரவாளி ஆவாள். மரியானாளே! நீ இவனைவிட ஓர் நல்ல புருஷனை அடைய அவனுடைய பாசத்திலிருந்து உன்னை விடுவிக்கிறேன் என்றார். உடனே மரியானாள் அரசன் பாதத்தில் விழுந்து "எங்கள் நேசத்திற்குப் பாத்திரமாகிய அரசே, எனக்கு மற்றோர் புருஷன் வேண்டாம்" என்று சொல்லி இஸாபெல்லாள் தன் சகோதரனுக்கு உயிர்ப்பிச்சை கொடுக்க ஆஞ்செலோவை எப்படி மன்றாடினாளோ அதேவிதமாய் தன் நன்றிகெட்ட புருஷனாகிய ஆஞ்செலோவின் உயிரை அரசனிடம் மன்றாடினாள். பிறகு இஸாபெல்லாளைப் பார்த்து "இஸாபெல் மதுரகுணசீலி எனக்காக நீயும் மன்றாடு, உன் முழந்தாளை எனக்கு இரவல்கொடு, அதற்காக என் வாழ்நாள் முழுதும் என் உயிரைக் கொடுப்பேன் என்றாள்.

அரசன்:—நீ புத்திகெட்டதனமாய் அவளை மன்றாடுகிறாய். உன் மனதிற்கிரங்கி அவள் என்முன் முழந்தாள்படி இடுவாளானால் உடனே அவள் சகோதரனின் சவம் தன் கல்லறையைப் பெயர்த்துக்கொண்டு வந்து பயங்கரத்துக்குரிய விதமாய் அவளைக் கொண்டுபோகும்.

மரியானாள்:—இஸாபெல் மதுரகுண இஸாபெல் என் பக்கமாய் முழந்தாட்படியிட்டு உன் கையை நீட்டு, நீ ஒன்றும் பேசவேண்டியதில்லை. உனக்காக நான் பேசுகிறேன். நல்லவர்களில் அனேகர் குற்றங்களால் உரு



வாக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். கொஞ்சம் கெட்டவர்களாயிருந்ததினாலேயே பிறகு அதி நல்லவர்களாய் மாறிப்போகிறார்கள். என் புருஷனும் அப்படியே மாறக்கூடும். இஸாபெல் எனக்காக மன்றாடமாட்டாயோ?

அரசன்:—கிலாடியோவைக் கொன்ற குற்றத்திற்காக ஆஞ்செலோ இறப்பான்.

இஸாபெல்லாள்:—மரியானாளின் வேண்டுகோளுக்கிரங்கி ஆஞ்செலோ தன் சகோதரனைக் கொன்றவனென்றுகூட பாராமல் அபகாரியாயிருந்தாலும் உபகாரம் செய்யவேண்டுமென்று அரசன் முன் முழந்தாட்படியிட்டு "தயாளகுணப் பிரபு! என் சகோதரன் உயிர்பிழைத்திருப்பதாகவே எண்ணி இந்தக் குற்றவாளியின்பேரில் கண்ணோக்கியருளும். என்னைப்பார்க்கிறதற்கு முந்தி அவன் செயல்கள் நியாயமாகவே இருந்தன. என் சகோதரனின் பாவம் மரணதெண்டனைக்குரிய குற்றம்தான்.

இன்னும் இஸாபெல் தன் பிரார்த்தனையை முடிக்கா முன்னர் தன் கதி என்னாகுமோ என்று காவற்கூடத்தில் சிந்தித்துக்கொண்டிருந்த கிலாடியோ அரசன் கட்டளைப்படி நியாய ஸ்தலம் கொண்டுவரப்பட்டு அவன் எதிரே நிறுத்தப்பட்டான். ஆஞ்செலோவின் சதிமோசத்தால் இறந்த தன் சகோதரனின் சவம் அதன் பகையாளிக்காக தான் மன்றாடுவதைச் சகிக்காமல் தன்னை எச்சரிக்க எங்கே வந்ததோ என்று எண்ணி திடுக்கிட்டாள்.

அரசன்.—இஸாபெல்லாளை நோக்கி இவன் உன்

சகோதரனைப்போலிருந்தால் அவனை உனக்காக மன்னிக்கிறேன் என்றான். உடனே இஸாபெல்லாள் தன் சகோதரனைப்போய் கட்டிக்கொண்டாள். இருவரும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி முத்தமிட்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்.

அரசன்:—இஸாபெல்லாளைக் கைபிடித்து காதலி நீ எனக்குச் சொந்தமென்றனை, உன் சகோதரன் என் சகோதரனுவான் என்றார். பிறகு ஆஞ்செலோவை நோக்கி ஆஞ்செலோ உன்னையும் மன்னிக்கிறேன். நீ மரியானாளை நேசி, அவள் எவ்விதத்திலும் உன் அன்புக்குப் பாத்திரமானவள். நான் ஒரு பரிசுத்த குருவென்று நினைத்து அவள் துக்கத்தை என்னிடம் வெளியிட்டபோது அவள் உன்னை எவ்வாறு நேசித்தாளென்று நான் அறிவேன். இலாடியோ ஜூலியத்தாளை மணக்கவேண்டும் என்று மொழிந்து புண்ணியமும் பெருந்தன்மையும் பொருந்திய இஸாபெல்லாளை தன்னைக் கலியாணஞ்செய்துகொள்ள மன்றாடினான். இஸாபேல் இன்னும் கன்னிகை உடை தரியாதவளானபடியாலும் சந்நியாசி உடை தரித்துத் தனக்கு அரசன் செய்த நன்மைகளுக்காகவும் நன்றியறிதலாக அரசனைக் கலியாணம் பண்ணிக்கொள்ளச் சம்மதித்தாள். இரக்கம் நிறைந்த அரசனும் புண்ணியவதியான இஸாபெல்லாளை மணந்து அனேக காலம் ஜீவித்திருந்தார்.

57854

"இன்னாசெய்தாரை யொறுத்தவர் நாண
நன்னயஞ் செய்துவிடல்."

---

முற்றிற்று.